Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, JULY 15 2025

செவ்வாய்க்கிழமை 15, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 283 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



## கண்களை மூடிய ‘கன்னடத்துப் பைங்கிளி’

முழுச் செய்தி P5

### கைது செய்யப்பட்டால்

# பிணை கோரி ராஜித மனு




கிரிந்த மீன்வளத் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை கொரிய நிறுவனத்திற்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு 20 மில்லியனுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் தேடப்பட்டு வரும் முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் முன் பிணை மனுவை, திங்கட்கிழமை (14) அன்று தாக்கல் செய்ய உள்ளார்.

சந்தேக நபர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்கக் கோரி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை (11) அன்று மனு தாக்கல் செய்திருந்தது, மேலும் இந்த மனுவைப் பரிசீலித்த நீதவான் நீதிமன்றம், ராஜித சேனாரத்ன சந்தேக நபராக இருந்தால் அவரைக் கைது செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை என்று கூறியது.

அதன்படி, கூடுதல் நீதவான் ராஜித் சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் உத்தரவிட்டார்.

இருப்பினும், கைது செய்யப்படவிருந்த சந்தேக நபரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு வந்து வாக்குமூலம் அளிக்குமாறு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்தது,

ஆனால், அவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், அவரது அலைபேசி போன் பதினைந்து நாட்களாக நிறுத்திவைக்கப்பட்டு உள்ளதாகவும் பொய்யாகக் கூறி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவை தொடர்ந்து தவிர்த்து வந்துள்ளார்.





### முக்கிய தேர்தல் வாக்குறுதிகளைக் கண்காணிக்க

# ‘அனுர மீட்டர்’ அறிமுகம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் வாக்குறுதிகளைக் கண்காணிக்கும் புதிய தளமாகிய ‘அனுர மீட்டர்’ (Anura Meter)ஐ Manthri.lk திங்கட்கிழமை (14) அன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

வெரிடே ரிசர்ச்சின் ஒரு தளமாக செயல்படும் Manthri.lk, ஜனாதிபதி அவர்கள் 2024 ஜனாதிபதித் தேர்தலின் போது, வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் (manifesto) இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய வாக்குறுதிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் இணையதள அடிப்படையில் அனுர மீட்டர் எனும் இப் புதிய கண்காணிப்பு அமைப்பை இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தளத்தின் மூலம் பொருளாதார சீர்திருத்தம், நல்லாட்சி, ஊழல் தடுப்பு, சட்ட ஒழுங்கு, மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற பொது நலன் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 22 வாக்குறுதிகள் தெரிவு செய்யப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றன.

அனுர மீட்டர் தளம் மூன்று முக்கிய மூலங்களிலிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் புதுப்பிக்கப்படுகிறது. அவையாவன;

1) வெளியிடப்பட்ட மற்றும் அறிக்கைகளில் காணப்படும் தகவல்கள்

2) தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மூலம் பெறப்படும் பதில்கள், மற்றும்

3) பொது மக்களிடமிருந்து பெறப்படும் நம்பத்தகுந்த தகவல்கள். Manthri.lk இணையதளத்தில் உள்ள அனுர மீட்டர் பக்கத்திற்குச் சென்று, மக்கள் தங்கள் தகவல்களையும் யோசனைகளையும் வழங்க அழைக்கப்படுகிறார்கள்.

இது, வெரிடே ரிசர்ச்சினால் முன்னெடுக்கப்படும் ஒரு முயற்சியாகும். தகவல் பகிரப்படல் மற்றும் ஜனநாயக ரீதியான ஈடுபாட்டை மேம்படுத்துதல் என்பன இதன் பிரதான நோக்கமாகும்.

அனைத்து இலங்கையர்களும் பயன்படுத்தக் கூடிய வகையில், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் இந்த தளம் செயற்படுத்தப்படுகிறது.



# காதுகளால் வாகனத்தை இழுத்துச் சாதனை

எஸ்.தில்லைநாதன்

பல்வேறு சாதனைகளை புரிந்து வரும் மட்டுவிலைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம் (வயது - 61) என்பவர் ஞாயிற்றுக்கிழமை (13) அன்று மட்டுவில் சந்திரபுரத்தில் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இவர் தனது இரு காதுகளையும் பயன்படுத்தி 2 ஆயிரத்து 50 கிலோ எடை கொண்ட பிக்கப் ரக வாகனத்தை 50 மீட்டர் தூரத்துக்கு இழுத்துச் சாதனை புரிந்துள்ளார்.

உலக சாதனையை நிகழ்த்துவதற்காக அவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளதுடன், அவர் தனது தாடியால் அதே வாகனத்தை 50 மீட்டர் தூரத்துக்கு இழுத்து மீண்டும் ஒரு சாதனை படைத்துள்ளார்.

# கொழும்பு மேயரின் நடனம் வைரலானது





கொழும்பு மாநகர சபையின் மேயர் வ்ராய் கெலி பல்தசார், ஒரு பொது விழாவில் பாரம்பரிய ஜப்பானிய நடனத்தில் பங்கேற்றது சமூக ஊடகங்களில் மிகவும் விரும்பப்படும் கதைகளில் ஒன்றாக மாறியுள்ளது.

இலங்கை-ஜப்பான் நட்பின் 73 ஆண்டுகளை குறிக்கும் வகையில், தேசிய இளைஞர் மன்றத்தில் நடைபெற்ற நிகழ்வின் ஒரு பகுதியாக நடைபெற்ற பாரம்பரிய ஜப்பானிய நடன நிகழ்ச்சியில் மேயர் பங்கேற்றார். மேயரின் நடன நிகழ்ச்சியின் வீடியோ சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் மேயர் வ்ராய் கெலி பல்தசார் தனது பேஸ்புக் பதிவில், இலங்கையில் உள்ள ஜப்பான் தூதர் அகியோ இசோமாட்டா மற்றும் முதல் செயலாளர் ஷினிச்சி முராட்டாவை சந்தித்ததில் பெருமைப்படுவதாகக் கூறினார். இருப்பினும், நடன நிகழ்ச்சி வீடியோ பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

“இலங்கையில் தேசிய முயற்சிகளுக்கு ஜப்பான் தொடர்ந்து வலுவான ஆதரவாளராக உள்ளது, மேலும் கொழும்பு நகராட்சி மன்றத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நாங்கள் உற்சாகமாக இருக்கிறோம். நமது நகரத்திற்கும் அதன் மக்களுக்கும் பயனளிக்கும் அர்த்தமுள்ள கூட்டாண்மைகளை உருவாக்க எதிர்நோக்குகிறோம்” என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



### 7 மாதங்களில்

# 68 துப்பாக்கிச் சூடுகள்; 37 மரணங்கள்

இந்த வருடத்தில் (2025) கடந்த 7 மாதங்களில் நாடு முழுவதும் 68 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் எஃப்.யு.வுட்லர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### பொதி செய்யப்படாத

# “எண்ணெய் நிறுத்தப்படும்”

சந்தையில் பொதி செய்யப்படாத தேங்காய் எண்ணெய் விற்பனையை நிறுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தேங்காய் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் சாந்த ரணவக்க தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை (13) அன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் பல்வேறு வகையான எண்ணெய்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகவும், இந்த எண்ணெய்களை உட்கொள்வதால் தொற்றாத நோய்கள் ஏற்படும் என்று பலர் கூறுவதாகவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



# ‘தங்கமுலாம்’ துமிந்தவுக்கு நிபந்தனை பிணை

தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்ததாகக் கூறப்படும் வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திசாநாயக்க தாக்கல் செய்த பிணை மனுவை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, குற்றம் சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கி, தலா 250,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளை விதித்தார். குற்றம் சாட்டப்பட்டவருக்கு பயணத் தடையையும் நீதிமன்றம் விதித்தது.

இரண்டு சரீரப் பிணையாளர்களும் கொழும்பு மாவட்டத்தில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# முன்னாள் உதவி ஆணையாளர் உட்பட மூவருக்கு பிணை

சுங்கத்துறைக்கு களவாக கடத்தப்பட்ட சொகுசு டொயோட்டா ஜீப்பை சட்டவிரோதமாக பதிவு செய்வதற்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்துத் துறையின் முன்னாள் உதவி ஆணையர் உட்பட மூன்று சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க திங்கட்கிழமை (14) அன்று உத்தரவிட்டார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள், மோட்டார் போக்குவரத்துத் துறையின் முன்னாள் உதவி ஆணையர் மற்றும் காணி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் சூரிய பிரியங்கனி சிறிமான்னே, மோட்டார் போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டு உதவியாளர் அபேசிங்க ஆராச்சிகே சஞ்சீவ குமார மற்றும் மேற்பார்வை அதிகாரி இந்திக லக்ஷ்மன் ஹேரத் ஆகியோர் ஆவர்.

சந்தேக நபர்களுக்கு தலா 2 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு பிணைப் பத்திரங்களை விதித்த நீதவான், சந்தேக நபர்கள் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கவும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர், சந்தேக நபர்கள் 2018 ஆம் ஆண்டு ஜப்பானில் தயாரிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் டொயோட்டா GS9164 வாகனத்தை சட்டவிரோதமாகப் பதிவுசெய்து, அதற்கு உதவி செய்து, உடந்தையாக இருந்ததன் மூலம் அரசாங்கத்திற்கு ரூ.32,268,620.00 நட்டத்தை ஏற்படுத்தியதாக மூவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# 68 துப்பாக்கிச் சூடுகள்; 37 மரணங்கள்

சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று திங்கட்கிழமை (14) நடைபெற்றுள்ளது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வருடம் ஞாயிற்றுக்கிழமை (13) வரை பதிவான துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 50 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடையவை என்றும், மீதமுள்ள 18 சம்பவங்கள் வேறு நபர்களால் குறிவைக்கப்பட்டு தனிப்பட்ட காரணங்களுக்காக நடந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

68 சம்பவங்களில் 37 பேர் இறந்துள்ளனர், அதில் 34 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்றும் அவர் கூறினார்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் மொத்தம் 39 பேர் காயமடைந்துள்ளனர், அதில் 30 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# “எண்ணெய் நிறுத்தப்படும்”

எனவே, தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் சந்தையில் வெளியிடப்படும் எண்ணெய்யை உற்பத்தியாளர் உட்பட தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய பொதியுடன் சந்தைக்கு வெளியிட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இந்த சூழ்நிலைக்கு ஏற்ப சில மாதங்கள் அவகாசம் அளிப்பதாகவும், பின்னர் இதை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

சந்தையில் தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் கலப்பட எண்ணெய் விற்பனையைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சீட்டிழுப்பாளர் விலகியதால் 750 மில்லியன் ரூபாய் நட்டம்



2023இல் ஒப்பந்த அடிப்படையில் 2 வருடங்களுக்கு வர்த்தக கண்காட்சி உத்தியோகத்தர்களை நியமித்தல், நிகழ்நிலை சீட்டிழுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சீட்டிழுப்பாளர் அதிலிருந்து விலகியமை காரணமாக நிதியத்துக்கு 750 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டமை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன் அது தொடர்பில் தடயவியல் கணக்காய்வு நடாத்தி தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு கோப் குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. .

மகாபொல நிதியத்திற்குச் சொந்தமான இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தை (SLIIT) முழுமையான தனியார் நிறுவனமாக மாற்றுவது சட்டவிரோதமானது என்றும், அதனை மகாபொல நிதியத்தினால் நிர்வகிக்கும் நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கையை எடுக்குமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) அறிவுறுத்தியது.

இதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) நிஷாந்த சமரவீர, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஈ.விமலேந்திர ராஜா மற்றும் மகாபொல நம்பிக்கை நிதியத்தின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித மலல்கொட ஆகியோருக்கு அறிவுறுத்தினார்.

லலித் அத்துலத்முதலி மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து கடந்த 09ஆம் திகதி கோப் குழுவில் ஆராயப்பட்டபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அப்போதிருந்த அமைச்சரின் ஒப்புதலுடன் குறித்த சொத்து கையகப்படுத்தப்பட்டமை சட்டவிரோதமானது என்பது குறித்து இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. இதற்காக ரூ.408 மில்லியன் SLIIT நிறுவனத்தினால் மகாபொல நிதியத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், நிதியத்திற்குச் சொந்தமான நிறுவனத்தினால் நிதியத்திற்கு இவ்வாறு நிதியை வழங்கி உரிமையைப் பெற்றுக்கொள்வது பிரச்சினைக்குரியது என்றும் கோப் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இதற்கமைய இதில் தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற சட்டவிரோத அல்லது மோசடியான செயற்பாடுகள் இடம்பெறாது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோப் குழுவின் தலைவல் வலியுறுத்தினார். இது தொடர்பில், கருத்துத் தெரிவித்த பதவி ரீதியாக நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, இதுபோன்ற மோசடிகள் மூடிமறைக்கப்படுவதற்கு இடங்கொடுக்கப் போவதிலலையென்றும், எதிர்காலத்தில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் கூறினார்.

நேர்மையான நோக்கத்திற்காக அரசாங்க நிறுவனமாக ஆரம்பக்கப்பட்ட இந்நிறுவனம் பணிப்பாளர் சபையில் பதவி அடிப்படையில் நியமிக்கப்படும் அரசாங்க அதிகாரிகள் பணியாற்றியதாகவும், காலப்போக்கில் பாரிய அளவில் இலாபமீட்டும் இடமாக இனங்காணப்பட்டதால் ஏற்பட்ட பேராசை காரணமாக இவ்வாறு சட்டரீதியற்ற வகையில், அரசாங்கத்திடமிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அப்போது இந்நிறுவனத்தை மாற்றுவதற்கு எதிர்த்த அதிகாரியொருவர் குழுவில் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் மூலம் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் படிக்கும் ஒரு பல்கலைக்கழகம் வீழ்ச்சியடையக்கூடும் என்ற தவறான எண்ணத்தை உருவாக்க சிலர் முயற்சிக்கலாம் என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

எனினும், SLIIT நிறுவனத்தை அப்படியே பராமரிக்க வேண்டும் என்றும், அதன் பொறுப்பை மகாபொல நிதியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இதன் மூலம், அதிகமான மாணவர்கள் மானிய விலையில் பட்டப்படிப்புகளைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில், உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளிட்ட முக்கியமான பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்கள் முறையாக நிரப்பப்படவில்லை என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வளவு பெரிய தொகையை கையாளும் ஒரு நிறுவனத்தின் ஊழியர்களை முறையாக நிரப்பத் தவறியது அதன் செயல்திறனின் அடிப்படையில் ஒரு பெரிய பிரச்சினையாகும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

மகாபொல நிதியத்தினால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களான நஷனல் வெல்த் கோப்ரேஷன் லிமிடட் நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படும் வரையறுக்கப்பட்ட நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் ஆகியவற்றின் தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் நிதியை மீண்டும் முதலீடு செய்வது தொடர்பான பல சிக்கல்கள் இருப்பதால், இது தொடர்பாக தடயவியல் கணக்காய்வு நடத்தப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் இங்கு முடிவு செய்யப்பட்டது.

சொத்துக்கள், பொறுப்புகளை

# அறிவிக்கத் தவறிய அதிகாரிகளுக்கு அபராதம்



சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளிடமிருந்து திங்கட்கிழமை (14) முதல் அபராதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், ஏராளமானோர் தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்க உள்ளதாகவும், செவ்வாய்கிழமைக்குப் (15) பிறகு தங்கள் அறிவிப்புகளை சமர்ப்பிக்கும் அரசு அதிகாரிகளிடமிருந்து அபராதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையம் கூறுகிறது.

இன்று செவ்வாய்கிழமைக்குப் (15) பிறகு தாமதமான நாட்களுக்கு தங்கள் சம்பளத்திலிருந்து சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அரசு அதிகாரிகளிடமிருந்து அபராதம் வசூலிக்கவும் ஆணையம் திட்டமிடப்பட்டுள்ளது.

ராஜித விவகாரம்:

# பணிப்பாளருக்கு நோட்டீஸ்

முன்னாள் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன கைது செய்வது தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (18) அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியங்களை வழங்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு, திங்கட்கிழமை (14) நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வு திட்டத்தை கொரிய நிறுவனத்திற்கு வழங்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டால், முன் பிணை கோரி ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த பிணை மனுவை பரிசீலித்த பின்னர் இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

மீன்பிடித் துறைக்கு சிறந்த சேவையை வழங்கிய முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை சிவில் விவகாரம் தொடர்பாக கைது செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக சந்தேக நபர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்ரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தைச் சுத்தம் செய்வது தொடர்பான ஒரு விஷயத்தின் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்படுவதாகவும், மணல் அகழ்வாராய்ச்சி இயந்திரத்தைப் பயன்படுத்தி கிரிந்த மீன்பிடி துறைமுகத்தைச் சுத்தம் செய்த பிறகு சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனம் பணம் செலுத்தாதது தொடர்பாக கொழும்பு வணிக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

சிவில் விவகாரத்தின் அடிப்படையில் வழக்கு நிலுவையில் உள்ள ஒரு சம்பவம் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு நிரபராதியைக் கைது செய்யத் தயாராகி வருவதால், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என்றும் அவர் கோரினார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்ட பிரதான நீதவான், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தை ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகி, சம்பந்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தனது விளக்கத்தை முன்வைக்க உத்தரவிட்டார்.

இலங்கை – ஈரான் பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவராக

# அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவு

பத்தாவது பாராளுமன்றத்துக்கான இலங்கை - ஈரான் பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவராக கௌரவ சுற்றாடல் அமைச்சர் (வைத்தியர்) தம்மிக பட்டபெந்தி தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை - ஈரான் பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் புதன்கிழமை(09) அன்று நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் (கலாநிதி) அலிரெசா டெல்கோஷ் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன், பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உள்ளிட்டோரும் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) நஜித் இந்திக்க இலங்கை - ஈரான் பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு உரையாற்றிய சபாநாயகர், இலங்கை மற்றும் ஈரானுக்கிடையிலான நீண்டகால உறவுகளை எடுத்துக்கட்டியதுடன், இரு தரப்பு ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார். இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்தின் பிரதான பங்காளியாக ஈரான் இருப்பதாகவும், குறிப்பாக உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான நிதி ஆதரவாளராக ஈரான் இருந்து வருவதாகத் தெரிவித்தார். இலங்கை தேயிலை ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க ஏற்றுமதி செய்யப்படும் இடமாக ஈரான் இருப்பதாகத் தெரிவித்த அவர், சர்வதேசத் தளங்களில் இலங்கைக்கு ஈரான் வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார். அத்துடன், மீள ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் பாராளுமன்றங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் எனவும், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கலாசாரத் துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கும் எனவும் சபாநாயகர் நம்பிக்கை வெளியிட்டார்.

நட்புறவுச்சங்கத்தின் புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஈரான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கௌரவ (கலாநிதி) அலிரெசா டெல்கோஷ், ஈரான் மக்களிடையே இலங்கை விசேட கௌரவத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச தளங்களில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான ஈரானின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார். மீள ஸ்தாபிக்கப்பட்ட நட்புறவுச்சங்கம் வலுவான பாராளுமன்ற ஒத்துழைப்பு மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை வளர்க்கும் என ஈரான் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டார். அத்துடன், விவசாயம், எண்ணெய் சுத்திகரிப்பு, கலை மற்றும் கலாசார பரிமாற்றம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் அவர் எடுத்துக்காட்டினார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், ஈரானுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு கௌரவ சபாநாயகருக்கும் நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.



# கௌரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் - குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை(13) சுபவேளையில் சிறப்புறவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது.


குப்பிழானைச் சேர்ந்த புலம்பெயர் அடியவர்கள் மற்றும் கிராமத்து அடியவர்களின் நிதிப் பங்களிப்பில் இவ் ஆலயம் தற்போது புதுப் பொலிவு பெற்றுத் திகழ்கின்றது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிவஸ்ரீ. கிருஷ்ண பிரணவக் குருக்களைப் பிரதிஷ்டா பிரதம குருவாகக் கொண்டு ஆலயப் பிரதமகுரு-சிவ ஸ்ரீ சி.கிருஷ்ணசாமிக் குருக்களின் நெறிப்படுத்துதலில் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியிருந்தது.









## மாணவர்களின் தொலைபேசி பாவனையை

# தடை செய்க

## ஜனாதிபதிக்கு கடிதம்

பாடசாலை செல்லும் மாணவர்களிடையே ஸ்மார்ட் தொலைபேசி பாவனையைத் தடை செய்ய வேண்டும் எனக்கோரி வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "இந் நாட்டில் தற்பொழுது புகைப்பொருள் பாவனை குறைவடைந்து இருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. ஆனால், போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதை கட்டுப்படுத்துவதற்கு நாம் பாடசாலை மட்டத்திலும் கிராமங்களிலும் செயற்பட்டு வருகின்றோம். ஆனால், போதைப் பாவனை குறைவடைவதை காணக் கூடியதாகத் தெரியவில்லை. இதனால் கூடுதலாகப் பாதிப்படைவது இளம் சந்ததியினர் ஆவார் குறிப்பாக மாணவர் சமுதாயம் ஆகும்.




மேலும், இப்படி இருக்கும் பொழுது ஒரு படி மேலாக தற்பொழுது மாணவர்களிடையே ஸ்மார்ட் தொலைபேசி பாவனையும் காணக் கூடியதாக உள்ளது. இந்த பாவனையைப் பாடசாலை மாணவர்கள் மட்டில் கட்டுப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தாங்கள் ஸ்ரீலங்காவைத் துப்புரவு செய்ய முன் வந்ததை மனதார பாராட்டுகிறோம். இதனைப்போல, ஸ்மார்ட் தொலைபேசி பாவனையை மாணவர்களிடையே துப்பரவு செய்ய வேண்டும். அதற்கான சில ஆலோசனைகளை முன்வைக்கின்றோம்.

அவையாவன :-

1.பொது இடங்களில் புகைப்பொருள் பாவித்தால் தண்டிக்கப்படுகின்றார்களோ அதேபோல, பாடசாலை செல்லும் மாணவர்கள் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் ஸ்மார்ட் தொலைபேசி பொது இடங்களில் பாவித்தால் தண்டிக்கப்பட வேண்டும்.

2. குறிப்பிட்ட மாணவர்கள் வீட்டில் ஸ்மார்ட் தொலைபேசி பாவிப்பதனை கண்டால் மாணவர்களின் பெற்றோர்களைத் தண்டிக்க வேண்டும்.

3. பிரத்தியேக வகுப்பு நடாத்தும் ஆசிரியர்கள் தொலைபேசி மூலம் வகுப்பு எடுத்தால் அந்த ஆசிரியரைத் தண்டிக்க வேண்டும்.

தொலைபேசி பாவனையை மாணவர்களிடையே தடை செய்ய வேண்டும் இதற்கு காரணம் பெற்றோருக்குத் தெரிந்த விடயங்கள் எல்லாம் இந்த தொலைபேசி மூலம் மாணவர்கள் அறிகின்றார்கள். ஆகவே தொலைபேசி பாவனையைத் தடை செய்ய வேண்டும் "என குறிப்பிடப்பட்டுள்ளது.



# குடிநீர் திட்டத்தை மேம்படுத்த கள விஜயம்

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் கிராமத்தில் பாலியாறு குடிநீர் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த கள விஜயம் ஞாயிற்றுக்கிழமை (13) மாலை இடம்பெற்றது.

குறித்த கள விஜயதில் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் மற்றும் வீடு அமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் அரச உயர் அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் கிராம் மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து அரச திணைக்கள அதிகாரிகளால் திட்டம் தொடர்பான விளக்கம் அமைச்சர் உள்ளிட்ட குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசத்தினை அமைச்சர் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

கம்பஹா மகாநகர சபை

வரவு செலவு அறிக்கை - 2026

குடிமக்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளைப் பெறுதல்

கம்பஹா மகாநகர சபை பிரதேச பிரஜைகளுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் அழைப்பு!

2026 ஆம் ஆண்டிற்கான உங்கள் பிரிவு/பகுதியின் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான உங்கள் ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை 2025-08-15 க்கு முன்னர் எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வரவு செலவு அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் உங்கள் ஆலோசனைகள் மற்றும் யோசனைகள் பரிசீலிக்கப்படும் என்பதை நான் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவலைப் பற்றிக் அனுப்புதல்
நகராட்சி ஆணையர், மகாநகர சபை, கம்பஹா
தொலைபேசி இல – 033-2222275
மின்னஞ்சல் – gmcgampaha@gmail.com / gmcacc56gmail.com

மேயர்
கம்பஹா மகாநகர சபை
கம்பஹா



# ஐஸுடன் கைதான இருவரிடம் விசாரணை

பாறுக் ஷிஹான்

ஐஸ் போதைப்பொருளை சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த இரு சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார், ஞாயிற்றுக்கிழமை (13) அன்று கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லரிச்சல் 01 பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நடமாடுவதாக சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இரு சந்தேக நபர்கள் சோதனை செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்த கையடக்க தொலைபேசியின் உட்பகுதியில் ஐஸ் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபர்கள் சம்மாந்துறை, புளக் ஜே 02 பகுதியைச் சேர்ந்த 28 வயது மற்றும் கல்லரிச்சல் 03 பகுதியைச் சேர்ந்த 19 வயது சந்தேக நபர்களாவர்.

இதன்போது, ஒருவரிடமிருந்து 2 கிராம் 631 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் உட்பட கையடக்க தொலைபேசி பணம் என்பன மீட்கப்பட்டதுடன், மற்றவரிடமிருந்து 330 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிகரெட்டுக்களுடன் இருவர் கைது



பாறுக் ஷிஹான்

சட்டவிரோத சிகரெட்டுக்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களை நிந்தவூர் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (13) அன்று கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக சிகரெட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாக நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.எஸ்.நிசாந்த வெதகேக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 07 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 4,601 சட்டவிரோதமான சிகரெட்டுக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன், சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் கைதான இருவரையும் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.



# பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு

அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பகிடிவதை வன்முறையைத் தடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை கண்டிப்பாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பகிடி வதை வன்முறையைத் தடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களைச் செயல்படுத்தத் தேவையான நிதி, தொழில்நுட்பம் மற்றும் பிற வசதிகளை உடனடியாக வழங்குமாறு கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

மேலும், வன்முறை தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக சட்டமா அதிபரிடம் தேவையான ஆலோசனையைப் பெற்ற பிறகு, சட்டத்தை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் நிலவும் பழங்குடி பாணியிலான வன்முறையை அகற்ற தேவையான சட்ட பின்னணி தயாரிக்கப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டின் 20ஆம் எண் காழ்ப்புணர்ச்சி தடுப்புச் சட்டம், இலங்கையில் நாசவேலையை சட்டவிரோதச் செயலாக முன்னர் அறிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின்படி, ஒரு கல்வி நிறுவனத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ கொடுமைப்படுத்துதலைச் செய்பவர் அல்லது பங்கேற்பவர் ஒரு குற்றத்தில் குற்றவாளி. ஒரு நீதிபதி முன் விசாரணையில் ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகையில் இழப்பீடு வழங்க உத்தரவிடப்படலாம் என்று அது கூறுகிறது.

குற்றவியல் மிரட்டல், சுதந்திரத்தைத் தடுத்தல், தவறான தடைகள் போன்ற கொடுமைப்படுத்துதலில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட ஒருவர் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படலாம் என்றும் சட்டம் கூறுகிறது. ஒரு புதிய நபரையோ அல்லது குழுவையோ ஒரு சமூகக் குழுவில் அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப்படும் கொடுமைப்படுத்துதல், அவமதிப்பு மற்றும் திட்டுதல் ஆகியவற்றின் பல்வேறு முறைகளைக் கொடுமைப்படுத்துதல் என்று வரையறுக்கலாம். ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்குப் பிறகு காழ்ப்புணர்ச்சியைத் தடுப்பது பற்றிய பேச்சு சமூகத்தை அடைந்திருந்தாலும், அது ஒரு நடைமுறைத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டதாக அடையாளம் காண முடியாது. காழ்ப்புணர்ச்சியைத் தடுப்பது குறித்த வழிகாட்டுதல்களை செயல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு அந்த காரணத்திற்காக மிகவும் முக்கியமானது. மனோதத்துவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவது போல, காழ்ப்புணர்ச்சியை ஆதரிப்பவர்களும் அதைச் செயல்படுத்துபவர்களும் சில மன நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு மனநோய். காழ்ப்புணர்ச்சியை ஓர் அழகான, இனிமையான அனுபவமாக விளக்குவது ஒரு மனநோய் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்குபவர் மீது உருவாக்கும் அசாதாரண பற்றுதல் அல்லது துன்புறுத்துபவர்கள் மீது மயக்கமான அன்புதான் இதற்குக் காரணம் என்று அது கூறுகிறது. பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் நாட்டின் போக்கை நிர்ணயிக்கும் இளம் தலைமுறையை உள்ளடக்கிய சமூக அடுக்கைக் குறிக்கின்றன. கல்வி முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சமூகமும் இதில் அடங்கும். அது ஒரு வகையான அறிவுசார் பிரதிநிதித்துவம். அந்த அறிவுசார் சமூகத்தை மனநோயாளிகள் அழிக்க அனுமதிக்க முடியாது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்த செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது, வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை, பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்



### சிங்கள மொழியில் பெயர் பலகை; மக்கள் விசனம்

ஹட்டன் - டிக்கோயா, பார்த் போர்ட் எனும் பிரதேசத்தில் பாதை செப்பனிடும் பெயர்ப் பலகை முழுமையாக சிங்களத்தில் மாத்திரம் எழுதப்பட்டு தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் எவ்வாறு வேற்றுமை செயற்பாடுகள், பாரிய அசௌகரியம் உண்டுபண்ணும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தித் தீர்வினை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எட்டு பாராளுமன்ற உறுப்பினர் கொண்ட இம் மாவட்டத்தில், கடந்த காலங்களில் இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறவில்லை எனவும் தற்போதைய அரசு ஏன் தமிழ் மொழியைப் புறக்கணிப்பு செய்கிறது எனவும் அப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும், இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி தமிழ் மொழியில் பெயர்ப் பலகை பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- செ.தி.பெருமாள்

# எம்.எச்.எம்.அஷ்ரப் என்ற விருட்சத்தை வேரறுத்தது யார்?

மொஹமட் பாதுஷா

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் மரணம் பற்றிய உண்மை இதுவரை வெளிக் கொணரப்படவில்லை. 2000ஆம் ஆண்டு செப்டம்பர் 16 இல் இடம்பெற்றது உண்மையிலேயே ஒரு ஹெலிகொப்டர் விபத்தா? அல்லது திட்டமிட்ட கொலையா என்ற சந்தேகங்கள் 25 வருடங்களாக நீண்டுகொண்டே இருக்கின்றன. எம்.எச்.எம். அஷ்ரப் தனி மனிதரல்ல.

வெறுமனே பத்தோடு பதினொன்றாவதாக அரசியல் பரப்பில் காலத்தைக் கழித்துவிட்டுப் போனவரும் அல்ல. அவர் ஒரு பிரதான அரசியல் கட்சியின் தலைவர் மட்டுமன்றி, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவனும் ஆவார் என்பதை அவரது அரசியல் எதிரிகளும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அஷ்ரபின் மரணம் தொடர்பாக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு விசாரணைக் குழவை நியமித்தார். அது தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. ஆனால், உண்மை வெளியில் கொண்டு வரப்படவில்லை. குறைந்தபட்சம் இந்த விசாரணை அறிக்கையின் முழுமையான பிரதிகூட சுவடிகள் திணைக்களத்திற்கு இன்னும் வழங்கப்படவில்லை.

இதுபோல, இன்னும் ஏகப்பட்ட குழப்பங்கள் உள்ளன. இது ஒரு சதித்திட்டமா?, பல தரப்பினர் ஒன்றிணைந்து அஷ்ரபை கொலை செய்தார்களா? பின்னர் இன்னுமொரு தரப்பு இதனை மூடி மறைத்ததா? என்ற கேள்விகளுக்கும் இன்றும் விடையில்லை.

அஷ்ரபின் மூலம் அரசியல் பலன் பெற்ற சந்திரிகா அம்மையாh்ர் இந்த உண்மையை கண்டறிந்து முஸ்லிம் சமூகத்திற்கு சொல்ல வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருந்தார். ஆனால், அவர் ஒரு கட்டத்திற்கு மேல் எதுவும் செய்யாமல் நிறுத்திக் கொண்டதாகவே தெரிகின்றது. அஷ்ரபின் மறைவுக்கு பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் கூட்டுத் தலைவர்களாக வந்தவர்களுள் ஒருவர் என்ற வகையிலும் தலைவரின் மனைவி என்ற வகையிலும் பேரியல் அஷ்ரப் இதற்காக முன்னின்றிருக்க வேண்டும். அவரும் "தலைவர் போய்விட்டார்தானே இனி என்ன செய்ய முடியும்" என்ற தோரணையிலும் என்றும், "விசாரணை அறிக்கையை வைத்து எதுவுமே செய்ய முடியாது" என்று ஒரு சட்டத்தரணி கூறியதை நம்பியும், தனது முயற்சிகளை நிறுத்திக் கொண்டதாக சொல்லப்படுகின்றது.

தலைவரின் துணைவியாரை விட, அஷ்ரபிற்குப் பிறகு மு.காவின் தலைவராக இன்றுவரை பதவி வகிக்கின்ற றவூப் ஹக்கீம் அதிக பொறுப்பைக் கொண்டுள்ளார். அவரும் அவர் சார்ந்தவர்களும்தான் இந்த விருட்சத்தில் அதிக கனிகளை சுவைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று ஹக்கீமுக்கு கிடைத்திருக்கின்ற தலைவர் என்ற இடமும் அங்கீகாரமும் அஷ்ரப் என்ற அரசியல் ஆளுமை விட்டுச் சென்றவையாகும். அதேபோன்று அஷ்ரபின் சிஷ்யர்கள் என தம்மைக் கூறிக் கொள்ளும் ஏ.எல்.எம்.அதாவுல்லா, எம்.ரி.ஹசன் அலி, மர்ஹூம் சேகு இஸ்ஸதீன், நஸீர் அகமட், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோராவது இதனை நிறைவேற்றியிருக்க வேண்டும்;

அஷ்ரபின் நேரடி அரசியல் சிஷ்யர் எனச் சொல்ல முடியாவிட்டாலும், அவரது கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மு.கா. ஊடாக அரசியலுக்கு வந்து, இன்று ஒரு முஸ்லிம் கட்சியின் தலைவராக இருப்பவர் என்ற வகையில் றிசாட் பதியுதீனுக்கும் இதில் பொறுப்புள்ளது. அதேபோல், பசீர் சேகுதாவூத் ஒரு முயற்சிகளைச் செய்த போதும் அது நீடிக்கவில்லை என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இந்நிலையில், ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சர்ஜூன் ஜமால்தீன் வெளியிட்டுள்ள 'எம்.எச்.எம்.அஷ்ரபின் மரணம்' எனும் நூல் இவ்விவகாரத்தை புதியதொரு கோணத்தில் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. எனலாம்.

அஷ்ரபின் மரணம் வெறுமனே ஒரு விபத்து என்ற மனோநிலையைக் கடந்து, உலக மற்றும் உள்நாட்டு அரசியலின் பின்னணியில் சில விடயங்களை சிந்திக்க வேண்டிய தேவைப்பாட்டை உணர்த்தியிருக்கின்றது.

அஷ்ரபோடு நீண்டகாலம் மிக நெருக்கமாக இருந்தவரும் அரசியல், சமூக ஆய்வாளருமான எம்.பௌஸர், சர்ஜூனின் 'எம்.எச்.எம்.அஷ்ரபின் மரணம்' நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் நேரடியாகவே சில விடயங்களைக் கூறியுள்ளார்.

அவர் இவ்வாறு கூறுகின்றார்,

"அஷ்ரபின் படுகொலை மரணம், 43 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க சி.ஐ.ஏயினால் கொலை செய்யப்பட்ட சிலியின் மக்கள் தலைவன் சில்வர்டோர் அலேண்டேயின் அரசியல் படுகொலையுடன் ஒப்பிடக் கூடியது. அஷ்ரபின் மரணம் வெறுமனே ஒரு உள்ளூர் திட்டமிடல் அல்ல. இதன் பின்னால் சர்வதேச அரசியலின் ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்திருக்கின்றது என நான் உறுதியாக நம்புகின்றேன். அதற்கு ஏவப்பட்ட ஒரு கருவியே விடுதலைப் புலிகள். இதன் பின்னால் நோர்வே மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் இருந்துள்ளனர்" என்கின்றார்.

இதனை புரிந்து கொள்வதற்கு அக்கால அரசியல் சூழலையும் நாட்டில் காணப்பட்ட பின்புலத்தையும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

பொதுவாக முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ்த் தேசியத்தோடும், சிங்கள பெருந்தேசியத்தோடும் இணைந்தே அரசியல் செய்து வந்தனர். சிங்கள அரசாங்கங்களின் புறக்கணிப்பு ஒருபுறமும், தமிழ் ஆயுதக் குழுக்களின் அக்கிரமங்கள் மறுபுறமும் முஸ்லிம்களை அழுத்திய காலமது.

எனவே, முஸ்லிம் இளைஞர்கள் ஆயுத வழியில் செல்லாமல் பாதுகாக்கவும் முஸ்லிம்களுக்கான சொந்த அரசியலை உருவாக்கவும் வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போதுதான் முஸ்லிம் காங்கிரஸ் உருவானது. அஷ்ரப் ஒரே காலத்தில் தமிழ் ஆயுதக் குழுக்கள் மற்றும் சிங்கள கடும்போக்கு சக்திகளின் அக்கிரமங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, குருக்கள் மடம், காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகள் என ஒவ்வொரு சம்பவத்திற்காகவும் அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் துணிந்து குரல்கொடுத்த தலைவராக அஷ்ரப் இருந்தார்.

ஆனால், குறுகிய காலத்திற்குள்ளே தேசிய அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் பெருவளர்ச்சி பெற்றது. சந்திரிகா அம்மையாரின் நண்பனாக அஷ்ரப் மாறிவிட்டிருந்தார்.

கொழும்பில்தான் முஸ்லிம்களுக்கான அரசியல் மையம் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இது வயிற்றில் புளியைக் கரைத்தது.

இப்படி, எம்.எச்.எம்.அஷ்ரப் பலருக்கும் தலையிடியாக, சவாலாக மாறிவிட்டிருந்தார் என்பதை சர்ஜூன் ஜமால்தீனின் புத்தகம் தெட்டத் தெளிவாக குறிப்பிடுகின்றது. புலிகள் உள்ளிட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள், அரசாங்கத்தின் ஒரு பிரிவினர், தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர், ஒருசில கடும்போக்காளர்கள் என இதனை வகைப்படுத்தலாம்.

இந்த சூழ்நிலையிலேயே இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற ஒரு விடயம் வந்தது. நகர்வுகள் குறித்து அஷ்ரபிடம் ஆலோசனை கேட்பவராக இருந்த சந்திரிகா அம்மையார், நோர்வே தலையீட்டுடனான சமாதான திட்டம் பற்றிக் கூறியதாகவும் அதற்கு அஷ்ரப் மறுத்ததாகவும் இந்த நூல் கூறுகின்றது.

"இந்த திட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்கிற்கோ எனது சமூகத்திற்கோ எந்த நன்மையும் இல்லை. எனவே இதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்மேடன"; என்று சந்திரிகாவிடம் அஷ்ரப் சொன்னதாக அஷ்ரபை அதற்கு முதல் நாள் இரவும் கூட சந்தித்திருந்த முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா இந்த நூலாசிரியரிடம் கூறியிருக்கின்றார்.

இது அப்படியே இருக்க, அஷ்ரபின் மரணத்திற்குப் பின்னர் நடந்தவற்றை நோக்குவோம். தலைவரின் மரணத்திற்குப் பிறகு மு.கா.வுக்கு இரட்டைத் தலைமை நியமிக்கப்பட்டு பின் றவூப் ஹக்கீம் தனித் தலைவராகின்றார். நோர்வே உள்ளே வருகின்றது. பேச்சுவார்த்தை நடக்கின்றது. முஸ்லிம்களுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை. ஆயினும் மு.கா. இந்தச் செயன்முறையில் பங்கேற்கின்றது. ரணில் விக்ரமசிங்கவின் கை ஓங்குகின்றது என பல மாற்றங்கள் நடக்கின்றன.

ஆகவே, தலைவர் அஷ்ரப் உண்மையிலேயே திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்றால். சம்பந்தப்பட்டோர் எதிர்பார்த்த மாறுதல்கள், பலன்கள் அவர்களுக்குக் கிடைத்ததாகவே சொல்ல முடியும். இந்தப் பின்னணியில் அஷ்ரப் மரணம் என்ற விடயமும் மூடிமறைக்கப்பட்டது எனலாம்.

ஆனால், ஆய்வாளரும் அரசியல் நோக்கருமான பௌஸர் இவ்விடயத்தைத் தெளிவாகக் கூறுகின்றார்.


"2002இல் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த அரசியல் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் ஒரு முக்கிய காய்நகர்த்தலே அஷ்ரப் மீது நடத்தப்பட்ட படுகொலைத் தாக்குதலாகும். ஒரு நாட்டில் ஒரு விடயத்தைச் செய்வதற்கு முன் தமது நிகழ்ச்சி நிரலைத் தங்குதடையின்றி நிகழ்த்த வாய்ப்பான சூழலைச் சர்வதேச ஆதிக்க அரசுகள் எப்படித் திட்டமிடும், அதற்கு என்ன என்ன செய்யும் என்பதை சமகால சர்வதேச அரசியல் தொடர்பில் அறிவுள்ளவர்கள் ஓரளவேனும் புரிந்து கொள்ளலாம்" என்று அவர் கூறியுள்ளார்.

இந்த ஹெலியில் தலைவர் அஷ்ரபுடன் கதிர்காமத்தம்பி என்ற ஒருவரும் சென்றிருந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் பின்னர் மாவீரர் பட்டம் வழங்கியதாகவும் அவர் கொண்டு சென்ற பையிலேயே குண்டு இருந்திருக்கலாம் என்றும் அக்காலத்தில் பேசப்பட்டது.

ஆனால், அன்றைய தினம் அஷ்ரபுடன் பெரியதம்பி என்று ஒருவரும் பயணித்துள்ளார். அவரது பயணப் பையும் சோதிக்கப்படவில்லை என்ற புதிய தகவல் மேற்படி புத்தகத்தில் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

ஆகவே, வெளிநாட்டுச் சக்தி, உள்நாட்டு அரசியல் தரப்பில் ஒருபகுதியினர், புலிகள் இணைந்து ஒரு கூட்டுச் சதித்திட்டத்தின் ஊடாக எம்.எச்.எம்.அஷ்ரப் என்ற பெருவிருட்சத்தை வேரறுத்துள்ளார்களா? என்ற சந்தேகம், 25 வருடங்களுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கு இருக்கின்றது.

எத்தனையோ பழைய விவகாரங்களுக்கு இப்போது நீதி தேடுவது போல, எம்.எச்.எம்.அஷ்ரபின் மரணம் குறித்த உண்மை வெளிக்கொணரப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்டால் மட்டுமே முஸ்லிம் அரசியல் நிம்மதி கொள்ளும்.



### தனிமை உணர்வும் டிஜிட்டல் உறவுகளும்:

# ஆலோசனை ஏன் அவசியம்?



புவனநாயகம் டிலுக்சிகா,
உளவளத்துணை மாணவி,
தேசிய சமூக
அபிவிருத்தி நிலையம்.

நவீன உலகின் ஒரு தவிர்க்க முடியாத அங்கம் டிஜிட்டல் மயமாக்கல். ஸ்மார்ட்போன்கள் நம் கைகளில், சமூக ஊடகங்கள் நம் விரல் நுனியில், ஒன்லைன் கேம்கள் நம் மனதை ஆட்கொள்ள என, நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் டிஜிட்டல் உலகத்துடன் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளோம். இந்த டிஜிட்டல் இணைப்புகள் நம்மை உலகளாவிய ரீதியாக ஒன்றிணைப்பதாகத் தோன்றினாலும், பலர் ஆழ்ந்த தனிமை உணர்வில் மூழ்கியிருப்பதை அனுபவிக்கிறார்கள். ஒருபுறம் டிஜிட்டல் உறவுகள் பெருகி வழியும் இந்த காலகட்டத்தில், மறுபுறம் நிஜமான மனத்திருப்தியைத் தரும், ஆழமான உறவுகளைக் கட்டியெழுப்புவது ஒரு சவாலாகவே உள்ளது. இத்தகைய சூழலில், தனிமை உணர்விலிருந்து மீண்டு வரவும், டிஜிட்டல் உலகில் ஆரோக்கியமான மனநலத்துடன் வாழவும் உளவியல் ஆலோசனை (Counseling) ஏன் இவ்வளவு அத்தியாவசியமாகிறது என்பதை இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

நமது சமூக ஊடக கணக்குகளான ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக்கணக்கான நண்பர்கள் இருக்கலாம். நாம் பல ஒன்லைன் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கலாம், தினமும் பலருடன் டிஜிட்டல் ரீதியாக உரையாடலாம். ஆனால், இந்த டிஜிட்டல் தொடர்புகள் பெரும்பாலும் மேலோட்டமானவையாகவும், ஆழமற்றவையாகவுமே இருக்கின்றன. ஒரு 'லைக்' அல்லது ஒரு 'கொமெண்ட்' என்பது ஒருபோதும் உண்மையான உணர்வுப்பூர்வமான ஆதரவிற்கு ஈடாகாது. நிஜ வாழ்க்கையில் அருகாமையில் இருந்து கிடைக்கும் ஒரு ஆறுதலான தொடுதல், கண்ணோடு கண் பார்த்துப் பேசும் நேரடிப் பேச்சு, அல்லது ஒருவரை நேரில் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பங்கள் படிப்படியாகக் குறைந்துவிட்டன. இது ஒரு *paradoxical* (முரண்பாடான) நிலையான 'கூட்டமான தனிமை' (Crowded Loneliness) எனும் நிலையை உருவாக்குகிறது. அதாவது, நாம் உலகத்துடன் டிஜிட்டல் ரீதியாக மிக நெருக்கமாக இணைந்திருந்தாலும், தனிப்பட்ட அளவில், ஒரு ஆழமான, அர்த்தமுள்ள தொடர்பு இல்லாததால், தனிமை உணர்வை அதிகமாக உணர்கிறோம். இந்த நிலை, மனநலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் ஒரு முக்கிய காரணியாக இன்று உருவெடுத்துள்ளது. டிஜிட்டல் உறவுகள் பல வசதிகளை அளித்தாலும், அவை சில தீவிரமான சவால்களையும் கொண்டுள்ளன. டிஜிட்டல் உரையாடல்கள் பெரும்பாலும் வெறும் தகவல் பரிமாற்றம் அல்லது நகைச்சுவைப் பகிர்வு என்பதோடு நின்றுவிடுகின்றன.

ஒருவரின் உடல்மொழி, முகபாவனை, குரல்வளம், மற்றும் உள்ளுணர்வுகளை டிஜிட்டல் தளங்களில் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. இது ஆழமான உணர்வுப்பூர்வமான புரிதலுக்கும், பிணைப்பிற்கும் தடையாக அமைகிறது. ஒருவருக்கொருவர் உணர்வுப்பூர்வமாக இணைந்துகொள்ள முடியாததால், உறவுகள் பலவீனமடைகின்றன. சமூக ஊடகங்களில் பெரும்பாலானோர் தங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சியான, குறைபாடற்ற பக்கத்தை மட்டுமே காட்ட முற்படுகிறார்கள். இது ஒரு செயற்கையான, நிஜமற்ற உலகத்தை உருவாக்குகிறது. இந்த போலி பிம்பங்களைப் பார்க்கும் மற்றவர்களுக்கு, தாங்கள் பின்தங்கியிருப்பதாகவும், தங்கள் வாழ்க்கை இவ்வளவு மகிழ்ச்சியாக இல்லையே என்றும் 'போலி ஒப்பீட்டு உணர்வு' (*False Comparison*) ஏற்படுகிறது. இந்த தொடர்ச்சியான ஒப்பீடுகள், சுயமரியாதையைக் குறைத்து, மன அழுத்தத்தையும், மனச்சோர்வையும் தூண்டுகின்றன. இளைஞர்கள் மத்தியில் இது ஒரு தீவிரமான பிரச்சினையாக மாறி வருகிறது. மேலும், ஒன்லைன் தளங்களில் அநாமதேயப் பயனர்கள் அல்லது வெறுப்புப் பிரச்சாரங்கள் மூலம் ஏற்படும் எதிர்மறையான கருத்துகள், கடுமையான விமர்சனங்கள், அல்லது நேரடியாக மிரட்டல்கள் ஒருவரின் மனநலத்தைப் பெரிதும் பாதிக்கலாம். இத்தகைய சைபர் மிரட்டல்கள் தனிநபரின் தன்னம்பிக்கையைச் சிதைத்து, அவர்களை மனரீதியாக பாதிக்கின்றன. சில சமயங்களில் இது தற்கொலை எண்ணங்கள் வரை கூட கொண்டு செல்கிறது. டிஜிட்டல் உலகிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதால், நிஜ உலக உறவுகளுக்கு போதிய நேரம் ஒதுக்க முடியாமல் போகிறது. குடும்ப உறுப்பினர்களுடனோ, நண்பர்களுடனோ நேரத்தைச் செலவிடுவதற்குப் பதிலாக, பலர் தங்கள் மொபைல் திரைகளில் மூழ்கிவிடுகிறார்கள். இது குடும்ப உறவுகளையும், நட்புறவுகளையும் பலவீனப்படுத்துகிறது. சமூக ஊடகங்களில் ஒருவர் எவ்வளவு பிஸியாக இருந்தாலும், நிஜ வாழ்வில் தனிமையாகவே உணரலாம். இந்த டிஜிட்டல் உலகில், தனிமை உணர்வு மற்றும் டிஜிட்டல் உறவுகளால் ஏற்படும் சவால்களைச் சமாளித்து, மன ஆரோக்கியத்தை பேண உளவியல் ஆலோசனை மிகவும் பயனுள்ள ஒரு தீர்வாகும். உங்கள் தனிமை உணர்வின் ஆழமான காரணங்கள் என்ன என்பதைப் புரிந்துகொள்ள ஒரு உளவியலாளர் அல்லது ஆலோசகர் உதவுவார். டிஜிட்டல் உலகின் எந்த அம்சங்கள் உங்களைப் பாதிக்கின்றன என்பதையும், உங்கள் தனிப்பட்ட பலவீனங்களையும், உணர்வுப்பூர்வமான தேவைகளையும் கண்டறிய அவர்கள் உதவுவார்கள். இந்த சுய-ஆய்வு, தீர்வை நோக்கிய முதல் படியாகும். டிஜிட்டல் உலகிற்கும் நிஜ வாழ்க்கைக்கும் இடையே ஆரோக்கியமான எல்லைகளை எப்படி உருவாக்குவது என்று ஆலோசகர்கள் வழிகாட்டுவார்கள். சமூக ஊடக பயன்பாட்டைக் குறைப்பது, குறிப்பிட்ட நேரங்களில் 'டிஜிட்டல் டிடாக்ஸ்' செய்வது, அல்லது சில அப்ளிகேஷன்களிலிருந்து தற்காலிகமாக வெளியேறுவது போன்ற நடைமுறை உத்திகளை கற்றுக்கொள்ளலாம். இது டிஜிட்டல் அடிமைத்தனத்திலிருந்து மீள உதவும். ஆழமான, அர்த்தமுள்ள உறவுகளை நிஜ வாழ்க்கையில் எப்படி உருவாக்குவது, அதற்கான சமூகத் திறன்களை எப்படி மேம்படுத்துவது என்பதில் உளவியல் ஆலோசனை உறுதுணையாக இருக்கும். நேருக்கு நேர் பேசுதல், கேட்பது, உணர்வுகளைப் புரிந்துகொள்வது, மற்றும் ஒரு உறவில் நம்பிக்கையை உருவாக்குவது போன்ற அத்தியாவசிய திறன்களை வளர்க்க அவர்கள் வழிகாட்டுவார்கள். டிஜிட்டல் உலகின் போலி ஒப்பீட்டுப் பொறிகளிலிருந்து மீண்டு, உங்கள் தனிப்பட்ட திறன்களையும், பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டு, தன்னம்பிக்கையை வளர்க்க ஆலோசனை உதவும். நீங்கள் யார் என்பதைப் புரிந்துகொண்டு, உங்கள் சுயமதிப்பை வெளிப்புற அம்சங்களோடு ஒப்பிடாமல், உள்ளார்ந்த மதிப்பின் அடிப்படையில் வளர்த்தெடுக்க முடியும். டிஜிட்டல் உலகின் சவால்களால் ஏற்படும் மன அழுத்தம், பதட்டம், மனச்சோர்வு போன்ற உணர்வுகளைக் கையாள பயனுள்ள வழிமுறைகளையும், தளர்வு நுட்பங்களையும் ஆலோசகர்கள் கற்றுத் தருவார்கள். *Mindfulness* (நினைவாற்றல்), சுவாசப் பயிற்சிகள் போன்ற உத்திகள் மூலம் அன்றாட வாழ்வின் அழுத்தங்களைச் சமாளிக்கும் திறனை வளர்க்கலாம்.

டிஜிட்டல் உலகம் நமக்கு எண்ணற்ற வசதிகளையும், தகவல்களையும் அளித்திருந்தாலும், அது கொண்டு வரும் தனிமை உணர்வையும், மனநல சவால்களையும் புறக்கணிக்க முடியாது. இந்த சவால்களைத் தைரியமாக எதிர்கொண்டு, அர்த்தமுள்ள, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ, உளவியல் ஆலோசனை ஒரு சிறந்த துணை. தனிமை உணர்வு உங்களை வாட்டினால், நீங்கள் தனியாக இல்லை என்பதை உணருங்கள். உங்களைப் போன்ற பலர் இந்த சவால்களை எதிர்கொள்கிறார்கள். ஒரு உளவியலாளரின் உதவியுடன், நீங்கள் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்வை நோக்கிப் பயணிக்க முடியும். உங்கள் மனநலத்திற்கு முன்னுரிமை அளித்து, தேவையான உதவியைப் பெறுவது ஒரு பலவீனமல்ல, அது ஒரு பலமான முடிவு.

# கண்களை மூடிய "கன்னடத்து பைங்கிளி"



பழம்பெரும் நடிகர் சரோஜா தேவி உடல்நலக்குறைவால் திங்கட்கிழமை (14) காலையில் பெங்களூருவில் உள்ள மருத்துவமனையில் தனது 87ஆவது வயதில் காலமானார்.

மூச்சுத்திணறல் காரணமாக பெங்களூரு கொலம்பியா ஏசியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சரோஜா தேவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சரோஜாதேவி தமிழ், தெலுங்கு மொழித் திரைப்படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வந்தவர். ஐம்பதாண்டு காலமாக திரைப்படத் துறையில் இருந்த இவர், 200 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

திரைப்படத்துறையினரால் 'கன்னடத்துப் பைங்கிளி', 'அபிநய சரசுவதி' போன்ற அடைமொழிகளால் அழைக்கப்படும் இவர் பல திரைப்பட விருதுகளையும், இந்திய அரசின் பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகளையும் வென்றுள்ளார். அதேபோல, வாழ்நாள் சாதனையாளர்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்த் திரையில் 25 ஆண்டுகள் முன்னணி நட்சத்திரமாக ஜொலித்த சரோஜாதேவியின் தந்தை பைரவப்பா காவல் அதிகாரி. தாய் ருத்ரம்மா குடும்பத் தலைவி. இவர்களுக்கு நான்காவது மகளாகப் பிறந்த சரோஜாதேவி, 'மகாகவி காளிதாஸா' என்ற கன்னடப் படத்தில் 1955ஆம் ஆண்டு அறிமுகமானார் சரோஜாதேவி. படம் மிகப் பெரிய வெற்றி. அதற்குத் தேசிய விருதும் கிடைத்தது.

'இல்லறமே நல்லறம்' என்ற படத்தில் சின்ன வேடத்தில் தமிழில் அறிமுகமானார் சரோஜாதேவி. அதன் பின்னர் 2வது கதாநாயகி வேடங்கள் கிடைக்கத் தொடங்கின.

எம்.ஜி.ஆர். சொந்தப்பட நிறுவனம் தொடங்கி இயக்கித் தயாரித்து நடித்த 'நாடோடி மன்னன்' படத்தில் 'ரத்னா'வாக வந்து தமிழ் ரசிகர்கள் மனதிலும் ஊடுருவினார்.

எம்.ஜி.ஆருடன் இணைந்து, 'நாடோடி மன்னன்' தொடங்கித் 'திருடாதே', 'தாய் சொல்லைத் தட்டாதே', 'படகோட்டி', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'பெற்றால்தான் பிள்ளையா', 'அன்பே வா' உட்பட அவர் நடித்த அத்தனை படங்களும் வெற்றி பெற்றன. எனினும், 'கல்யாணப் பரிசு' படத்தில் நடித்ததன் மூலமாகவே சரோஜாதேவி பெரும் நட்சத்திர அந்தஸ்து பெற்றார். சிவாஜி கணேசனுடன் பாகப்பிரிவினை, பாவமன்னிப்பு, பார்த்தால் பசி தீரும் என்று தொடங்கி 'புதிய பறவை'யாகக் காதலித்து அவரைக் கைது செய்ய வரும் இரகசிய பொலிஸாக பிரமாதப்படுத்தினார்.

படப்பிடிப்பில் ஒழுங்கு, காலம் தவறாமை ஆகியவற்றுக்குப் புகழ்பெற்ற சரோஜாதேவி அன்றைய நாயகிகளில் அதிக சம்பளம் வாங்கியவர் என்ற பெருமையும் கொண்டவர். சரோஜாதேவி திருமணத்துக்குப் பிறகும் கணவர் பி.கே. ஸ்ரீ ஹர்ஷாவின் அனுமதியுடன் படங்களில் கதாநாயகியாக நடித்தார்.

திருமணம் செய்து கொண்டால் வாய்ப்புகள் குறைந்துவிடும் என்ற மாயையை முதலில் உடைத்தெறிந்தவர். சரோஜா தேவி, எம்ஜிஆருடன் 26 படங்களிலும, சிவாஜி கணேசனுடன் 22 படங்களிலும் ஜோடியாக நடித்துள்ளார்.

### வடிவேலு – பகத் பாசில் நடிக்கும்

# 'மாரீசன்'



வடிவேலு - பகத் பாசில் இருவரும் இணைந்து மிரட்டும் 'மாரீசன்' திரைப்படம் எதிர்வரும் 25ஆம் திகதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது என படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இயக்குநர் சுதீஷ் சங்கர் இயக்கத்தில் உருவாகியுள்ள 'மாரீசன் ' திரைப்படத்தில் வடிவேலு, பகத் பாசில், கோவை சரளா, விவேக் பிரசன்னா, சித்தாரா, பி. எல். தேனப்பன், லிவிங்ஸ்டன், ரேணுகா, சரவணா சுப்பையா , கிருஷ்ணா, ஹரிதா, டெலிபோன் ராஜா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

கலைச்செல்வன் சிவாஜி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார். ஸ்ரீ ஜித் சாரங் படத்தொகுப்பு பணிகளை மேற்கொள்ள, மகேந்திரன் கலை இயக்கத்தை கவனித்திருக்கிறார்.

கிராமிய பின்னணியிலான திரில்லராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் சார்பில் பிரபல தயாரிப்பாளர் ஆர்.பி.சவுத்ரி தயாரித்திருக்கிறார்.

இப்படத்தின் டீசர் வெளியாகி படத்தைப் பற்றிய எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி இருந்தது. இந்நிலையில் இந்த திரைப்படம் ஜூலை மாதம் 25ஆம் திகதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்ப ட்டிருக்கிறது.

'மாமன்னன்' படத்திற்குப் பிறகு வடிவேலு - பகத் பாசில் கூட்டணி இணைந்திருப்பதாலும், இந்த படத்துக்கான டீசரில் இருவரும் அற்புதமாக நடித்திருப்பதாலும் படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

### மகாராஜா ஸ்டைலில்

# சூப்பர் ஸ்டார்





ரஜினிகாந்த் கூலி திரைப்படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டு தற்பொழுது ஜெயிலர் 2 திரைப்படத்தில் நடித்து வருகிறார். அதன் பின்னரன், ரஜினிகாந்த் எந்த படத்தில் நடிக்கப் போகிறார்? யார் அதை இயக்கப்போகிறார்? என்ற எதிர்ப்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவி வருகிறது. ரஜினிகாந்திடம் இயக்குநர்களான விவேக் ஆத்ரேயா, எச்வினோத் மற்றும் நித்திலன் சுவாமிநாதன் ஆகியோர் கதைகளை கூறியுள்ளனர். அதில் மகாராஜா படத்தை இயக்கிய நித்திலன் கூறிய கதை ரஜினிக்கு மிகவும் பிடித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இப்படம் ஓகே... ஆனால், படத்தை ரெட் ஜெயண்ட் மூவீஸ் தயாரிக்க இருக்கிறது. இதுக்குறித்த அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



காசா

## காசாவில் ஏவுகணை தாக்குதல்;
# குழந்தைகள் 20 பலி

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக சிறை பிடித்து செல்லப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, அவர்களை மீட்பதற்காக, காசாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது.

இந்நிலையில், 21 மாதங்களாக நடந்து வரும் போரில், காசா பகுதியில் 58 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், காசா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் பொறுப்பை, காசா மனிதாபிமான அறக்கட்டளையிடம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா வழங்கியுள்ளன.

இங்கு நாளொன்றுக்கு ஐந்து சரக்கு லாரிகளில் நிவாரண பொருட்கள் வருகின்றன. அவற்றை பெறுவதற்கு தினமும் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது.

அத்துடன், நுசைரத் அகதிகள் முகாமில் தண்ணீர் விநியோக இடத்தில் இஸ்ரேல் படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 34 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் சந்தை மற்றும் தண்ணீர் விநியோக இடத்தில் இருந்தவர்கள் என கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொழில்நுட்பக் கோளாறால் ஏற்பட்டதாகக் கூறிய இஸ்ரேல் இராணுவம், தற்போது இது குறித்து விசாரித்து வருவதாக விளக்கம் அளித்துள்ளது.




## பரிஸ் ஸா ஜெர்மைனை வீழ்த்தி
# சம்பியனானது செல்சி

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி சம்பியனானது.

ஐக்கிய அமெரிக்காவில் திங்கட்கிழமை (14) அன்று நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான இறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்றே செல்சி சம்பியனானது.

செல்சி சார்பாக கோல் பல்மர் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, ஜோவா பெட்ரோ ஒரு கோலைப் பெற்றார்.

இத்தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதை பல்மர் பெற்றதோடு, சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை செல்சியின் றொபேர்ட் சஞ்சேஸும், சிறந்த இளம் வீரருக்கான விருதை டிசையர் டுவேயும் பெற்றனர். சிறந்த நன்னடத்தையை வெளிப்படுத்திய அணியாக ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் தெரிவாகியது.



லண்டன்

## லண்டனில் புறப்பட்ட
# விமானம் தரையில் விழுந்து விபத்து

லண்டன் சவுத் எண்ட் விமான நிலையத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (13) அன்று மாலை 4 மணிக்கு சிறிய ரக விமானம் நெதர்லாந்துக்கு புறப்பட்டது.

இந்நிலையில், விமானம் புறப்பட்ட சில விநாடிகளில் தரையில் விழுந்து விபத்தில் சிக்கியது. இந்த சம்பவத்தில் விமானம் தீப்பற்றி எரிந்து வெடித்துச் சிதறியது.

தகவலறிந்த பொலிஸார் மற்றும் தீயணைப்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

விமானம் விபத்தில் சிக்கியதை அடுத்து அந்த விமான நிலையத்தில் விமான சேவை நிறுத்தப்பட்டது.

## இரண்டாவது போட்டியில்
# இலங்கையை வீழ்த்திய பங்களாதேஷ்

இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், தம்புள்ளவில் ஞாயிற்றுக்கிழமை(13) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

பங்களாதேஷ்: 177/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 76 (50), ஷமிம் ஹொஸைன் 48 (27), தௌஹிட் ஹிரிடோய் 31 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: பினுர பெர்ணாண்டோ 3/31 [4], நுவான் துஷார 1/30 [4], மகேஷ் தீக்ஷன 1/30 [4])

இலங்கை: 94/10 (15.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 32 (29), தசுன் ஷானக 20 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரிஷாட் ஹொஸைன் 3/18 [3.2], ஷொரிஃபுல் இஸ்லாம் 2/12 [3], மொஹமட் சைபுடீன் 2/21 [3], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/14 [3], மெஹிடி ஹஸன் மிராஸ் 1/26 [3])

போட்டியின் நாயகன்: லிட்டன் தாஸ்.



வொஷிங்டன்


## ரஷ்யா மீது மேலும்
# பொருளாதார தடைகள் விதிக்கப்படும்

ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்பதையும் டிரம்ப் சூசகமாக குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளும் முயற்சித்து வருகின்றன.

ஆனால், இதில் இன்னும் உடன்பாடு எட்டப்படாததால், உக்ரைன் மீது ரஷ்யா குண்டு மழை பொழிந்து வருகிறது. பதிலுக்கு உக்ரைனும் தாக்குதல் நடத்தி வருகிறது.

ரஷ்யா- உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வரும் ட்ரம்ப், புட்டினை கடுமையாக விமர்சித்து வருகிறார். வொஷிங்டன்னில்



செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப் கூறியதாவது, புட்டின் அழகாக பேசுகிறார். ஆனால், அனைவர் மீதும் குண்டுகளை போடுகிறார்.

உக்ரைனுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா அனுப்ப உள்ளது" என்றார். எனினும், எத்தனை ஆயுதங்கள் வழங்கப்படும் என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. அதேபோல, ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்பதையும் ட்ரம்ப் சூசகமாக குறிப்பிட்டுள்ளார்.

## இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில்
# இந்தியாவின் வெற்றிக்கு 135 ஓட்டங்கள் தேவை

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் வெற்றி பெறுவதற்கு இந்திய அணி 6 விக்கெட்டுகள் கைவசமிருக்கையில் இறுதி நாளில் 135 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது.

லோர்ட்ஸில் வியாழக்கிழமை(10) ஆரம்பித்த இப்போட்டியின் நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி இரண்டு ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து, மொஹமட் சிராஜ் (2), நிதிஷ் குமார் ரெட்டி, ஆகாஷ் டீப்,



வொஷிங்டன் சுந்தர் (4), ஜஸ்பிரிட் பும்ராவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 192 ஓட்டங்களையே பெற்றது. ஜோ றூட் 40, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.


பதிலுக்கு 193 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி, ஜொஃப்ரா ஆர்ச்சர், பிறைடன் கார்ஸ் (2), ஸ்டோக்ஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நான்காம் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் லோகேஷ் ராகுல் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளார்.

பீகார்

## வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டினர்:
# எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்

பீகார் மாநிலத்தில் இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில், வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெற்று வருகிறது.

இந்த சமயத்தில், வீடு வீடாக சென்று அதிகாரிகள் ஆய்வு செய்தபோது, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் மியன்மார் நாடுகளை சேர்ந்த பலரும் பீகார் மாநிலத்தில் வசித்து



வருவதும், அவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டதோடு, வாக்காளர் பட்டியலில் இன்னும் பெயர் இடம்பெற்றுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான 3ஆவது டெஸ்டில்
# 181 ஓட்டங்கள் முன்னிலையில் அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது டெஸ்டின் இரண்டாம் நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி 181 ஓட்டங்கள் முன்னிலையிலுள்ளது.

ஜமைக்காவில் ஞாயிற்றுக்கிழமை(13) அன்று ஆரம்பித்த இப்போட்டியின் இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 16 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், ஜொஷ் ஹேசில்வூட் (2), அணித்தலைவர் பற் கமின்ஸ்(2), ஸ்கொட் போலண்ட்(3), பியூ வெப்ஸ்டரிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. ஜோன் கம்பெல் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலியா, ஷாமர் ஜோசப் (2), அல்ஸாரி ஜோசப் (3), ஜஸ்டின் கிரேவ்ஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து இரண்டாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் கமரன் கிறீன் 42 ஓட்டங்களுடனும், கமின்ஸ் ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 15, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.